செ.வெ.எண் - 78 நாள் - 29/08/20

## பத்திரிக்கை செய்தி

---

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஸ்மார்ட் கார்டு (மின்னணு குடும்ப அட்டை) வழங்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு இது வரை 6,64,709 ஸ்மார்ட் கார்டு அட்டைகள் அச்சடித்து வரப்பெற்று குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 1,29,346 குடும்ப அட்டைகளில் புகைப்படம் இல்லாமலும், பிறந்த தேதி பதிவின்றியும், குடும்ப தலைவர் பெயர் குறிப்பிடாமலும், கணவர்/தகப்பனார் பெயர் இல்லாமலும் முகவரி சரியாக பதிவு செய்யப்படாமலும், பின்கோடு இல்லாமலும் மற்றும் குடும்ப உறுப்பினர் பெயர்கள் காலியாக உள்ளதாலும் மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்க கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

மேற்கூறிய குறைபாடுகள் உள்ள குடும்ப அட்டைகளின் விபரப் பட்டியல் சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளில் பொது மக்களின் பார்வைக்காக ஒட்டப்பட்டுள்ளது. எனவே பட்டியலில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய விடுபட்ட விபரங்களுடன் புகைப்படம், ஆதார் அட்டை மொபைல் எண் ஆகியவற்றை கொண்டு சென்று சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள தனி வட்டாட்சியர் / வட்ட வழங்கல் அலுவலர்கள் (கு.பொ.வ) அவர்களிடம் அளித்தால் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிட்டு தங்களுக்கு விரைவில் வழங்கப்படும். எனவே, பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

---

ந.க.எண். ண6/11250/16

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்
திருநெல்வேலி. நாள்: .08.2017.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி